**தமிழ் தகுதித் தேர்வு ( மாதிரித் தேர்வு)**

**பத்தாம் வகுப்பு தரம்**

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு- II நேர்முகத் தேர்வு பதவிகள் மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள் தொகுதி-II மற்றும் தொகுதி-IIA -க்கான முதன்மைத் தேர்வு**

**வினாத்தாளுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- **அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக**
- **வினா வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.**
- **விடைகள் தமிழில் (தமிழ் எழுத்தில்) மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது**
- **வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.**
- **எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும்.குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.**
- **வினா விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / குறுக்கே கோடு இடவும்.**

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

Please read each of the following instructions carefully before attempting questions:

- All questions are to be attempted.
- The number of marks carried by a question / part is indicated against it.
- Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.
- Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.
- Any page or portion of the page left blank in the Question-cumAnswer Booklet must be clearly struck off.

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

திருக்குறள் கட்டுரை வரைதல் 300 ( வார்த்தைகள் )

அ) நாட்டை ஆள்வோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் மற்றும் நாட்டில் எவையெல்லாம் இருக்க வேண்டும் என வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துக்களை தொகுத்து எழுதுக

ஆ) கற்றார் கல்லாதோர் வேறுபாடுகளை திருக்குறள் வழி நின்று விளக்கி எழுதுக

**கேள்வி எண் 2**

**பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.**

சமயவாதிகள் சிலர் பெண்ணினத்தை இழித்தும் பழித்தும் உரைத்தனர்; வெறுத்தனர். காமை உருண்டது. பெண்ணின் பெருமையை உணரத் தொடங்கிய காலத்தில், உதயமாயிற்று ஒரு நிலா: பாரதிதாசனால் புகழ்பெற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாரே. அந்த நிலா பெண்ணின் விடுதலையை எண்ணிச் சமுதாய மூடப் பழக்கவழக்கங்களைத் தகர்த்தெறியும் விடுதலையை எண்ணித் தலங்கிடந்த காலத்தில் தமிழர் தம் நீண்ட துயியினை நீக்கி அவர்களை விழிப்புறச் செய்ய உதித்தது அந்தி. இருளில் மூழ்கிக் கிடந்தவர்களைத் தட்டியெழுப்பி ஒளிபெறச் செய்தது அச்சந்திரோதயம் என்று பாரதிதாசன் போற்றுகிறார்.

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பொங்கி எழுந்தவர் பாரதியார். நாட்டுச் சுதந்திரம் மட்டுமன்றி வீட்டுச் சுதந்திரமும் வேண்டுமென்று வலியுறுத்தினார். இன்று. பெண்கள் சுதந்திரமாக வீட்டை விட்டு வெளியே வந்து வெளியுலகம் காண்பதற்கும் அறிலை வளர்த்துக் கொள்வதற்கும் பாதை வகுத்தும் தந்தவர் பாட்டுக்கொரு புலவனாய்த் திகழ்ந்த பாரதியே. அது மட்டுமா? இன்று மக்கள் பேரவை, சட்டமன்றப் பேரவை முதலியவற்றில் பங்கு கொண்டு அரசியலறிவை வளர்த்துக் கொள்ளும் அளவுககுப் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இந்த நிலைக்கு அன்றே ஏங்கிக் கிடந்த பாரதி, 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பெண்களை ஊக்கமூட்டினார். அச்சத்தின் காரணமாகப் பெண்கள் வெளியே வராமல் இருந்துவிடுவார்களோ என்ற பயம் பாரதிக்கு இருந்தது. எனவே, காலங்காலமாக அடிமைப்பட்டு வாழ்ந்த மகளிரை. அவர்கள் அச்சம் நீங்கி நெஞ்சுரத்தோடு வெளியே வரச் செய்யப் பெரிதும் அவர் முயன்றார்.- ஆண்களோடு, பெண்களும் சமானமாக வாழ்வோம் என்பதனை அவர்கள் வாயிலாகவே பாட வைத்தார். பெண்கள், பொருளற்ற சமுதாயக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டுப் புத்துலகச் சிற்பிகளாகத் திகழ வேண்டுமென விரும்பிய பாரதி நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையினையும் பெற்றுச் செம்மையுடையவராக வரவேண்டியது மிகவும்: அவசியம் என்பதை வலியுறுத்தினார். இதனால் அச்சம் தவிர்த்து புதுமைப் பெண்கள் நோன்றலாயினர்.

பெண்ணினத்திற்கு ஏற்பட்ட இழிவை அகற்ற ஓயாது உழைத்தவர் பாரதி. குழந்தைத் திருமணத்தை வன்மையாக எதிர்த்தார், இன்னும் குக்கிராமங்களில் ஐந்து அல்லது ஆறு வயது சிறுமிக்குப் பதினான்கு வயது ஆண்மகனைத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் மறையவில்லை. இத்தகைய பொம்மைத் திருமணங்கள் சமூகத்திலிருந்து களையப்படுதல் வேண்டும் என்று பல ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்தவர் பாரதி 'நராக' என்ற நூலில் முதுமைத் திருமணத்தை எதிர்த்து பெண்ணின் துயர் துடைக்கத் துடிக்கிறார் கிழவர்கள் இளம்பெண்களைத் திருமணம் செய்தல் கூடாது என்று சமூக நீதி வழங்கியது மட்டுமின்றிப் பெண்கள், இத்தகைய திருமணங்களுக்கு இணங்கக் கூடாது என்றும் எடுத்துரைக்கிறார். வரதட்சணையைக் கண்டித்தவர் பாரதி அவர் சீனா ஜப்பான முதலிய நாடுகளில் அன்பையே ஆதாரமாக வைத்து விவாகங்கள் நடக்கின்றன. இங்கே பணத்துக்காக விவாகங்கள் செய்து கொள்கிறார்கள், என்று 'எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை! என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார், நிமிர்ந்த நன்னடை வேண்டும். அஞ்சாமையும் செருக்கும் வேண்டும். ஆனால், ஆணவம் இருத்தல் கூடாது. நேர்கொண்ட பார்வை வேண்டும். ஆனால், அகங்காரம் கூடாது. இந்தகைய மகளிரே செம்மையுடையவர் எனப் பாரதி கூறியது போல் பெண்கள் வாழ்க்கை அமைய

வேண்டும். அத்தகு வாழ்வினை அமைந்துதருதல் சமூகத்தின் கடமை. பாரதியார் கனவு நனவாகி வரும் இக்காலத்தில் நாம் அனைவரும் தோள்கொடுத்து அவர் பணி மேன்மையுறச் செய்தல் வேண்டும். அவர் உணர்த்திய சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அவர் கவிதைகளைப் பாடிக் காற்றிலே விட்டுவிடக் கூடாது. நம் சொல்வன்மையாலும், செயல்வன்மையாலும், அவர் காட்டிய நெறிகளை உலகு உணரச் செய்தல் வேண்டும். பாரதியின் பாடல்கள் ஏட்டிலேயே நின்றுவிடக் கூடாது. மனம், வாக்கு செயல் மூன்றினாலும், நம் வாழ்வோடு ஒன்றிவிட வேண்டும். பெண் விடுதலைக்காகப் பாடிய ஒப்பற்ற கவிஞர் பாரதி என்பதை மனத்துட்கொண்டு, பெண் உரிமையைப் போற்றிக் கொள்ள வேண்டும்.

**வினாக்கள்** **( 5*2=10 மதிப்பெண்கள்)**

1. பெண்கள் எதனால் அச்சப்பட்டனர்? அச்சம் தவிர்த்த ஆசான் பாரதி-விளக்குக.
2. சமூகத்தின் கடமை யாது? பாரதிக்கு நாம் செய்யும் கைம்மாறு யாது?
3. நிலாவிற்கு முன்னிருந்த இருளும், பின் ஏற்பட்ட ஒளியும் பற்றி விளக்குக,
4. பெண்களுக்கு எந்த வகையில் பாரதி ஊக்க மூட்டினார்?
5. பெண்களின் துயர் களைந்த தூய உள்ளம் ஆற்றிய பணிகள் யாவை?

**கேள்வி எண் 3** **10 மதிப்பெண்கள்**

**கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

'இந்த உலகத்தை மாற்றுவதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி தான்"' என்று தென் ஆப்பிரிக்காவில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக போராடிய நெல்சன் மண்டேலா கூறினார். மண்டேலாவின் இந்த கருத்து கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை இது உண்மையாகும். இளம் ஜனநாயக நாடான இந்தியா கல்வித் துறையில் வெகுவேகமாக முன்னேறி வருகிறது. கல்விக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்ற நமது தேசத்தந்தையர்களின் தொலைநோக்குப் பார்வை நமது நாட்டிற்கு மிகச்சிறந்த பயனை அளித்திருக்கிறது. இந்தியாவில் காலம் காலமாகவே கல்வி மிக முக்கியமான இடத்தை பிடித்திருக்கிறது. பழங்கால இந்தியாவில் உயர் வகுப்பினர் அறிவைப் பெருக்குவதற்கான கல்வியை படித்த நிலையில், சத்திரியர்களும், வைசியர்களும் போர்க்கலை, வணிகம் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டனர். அப்போதே உயர்கல்வி கற்பதற்கான மையமாக இந்தியா திகழ்ந்திருக்கிறது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்விக்காக இந்தியாவுக்கு வந்தனர், அனைத்து வகை பாடங்களையும் வழங்குவதில் சிறப்பு பெற்றிருந்த நாளந்தா பல்கலைக் கழகம் ஒரு கட்டத்தில் 10 ஆயிரம் மாணவர்களைக் கொண்டிருந்தது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட மேல்நிலை கல்வி முறையை சமத்துவம் மற்றும் சமூக நீதிக் கொள்கையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட மக்களுக்கான கல்வி முறையாக மாற்ற நமது கொள்கை வகுப்பாளர்கள் கடினமாக உழைத்தார்கள். 2009 ஆம் ஆண்டில் கல்வி பெறும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலமும், தேசியக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டதன் மூலமும் கல்வி பெறுவது அடிப்படை உரிமையாக மாற்றப்பட்டது. அதுமட்டுமின்றி,

அனைவருக்கும் கல்வி இயக்கம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அனைவருக்கும் கல்வி கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளில் கொள்கை வகுப்பாளர்கள் ஈடுபட்டனர்.

அதன்பயனாக இந்தியா உலக அரங்கில் அதிவேகமாக வளரும் பொருளாதாரமாக மட்டுமின்றி, சக்திவாய்ந்தமனித வளத்தைக் கொண்ட நாடாகவும் பார்க்கப்படுக்கிறது. மெத்தப்படித்த, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில்தேர்ச்சி பெற்ற இந்தியர்கள் உலகின் அனைத்து மூலைகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்று இந்தியாவுக்கு பெருமை சேர்க்கின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்த போது நாட்டின் எழுத்தறிவு விகிதம் **12%** ஆக இருந்தது. ஆனால்,**2011** ஆம் ஆண்டில் இது **74.4%** ஆக அதிகரித்திருக்கிறது. கேரளம் **93.91** விழுக்காட்டுடனும், மிசோரம் **91.58** விழுக்காட்டுடனும் முன்னணியில் இருப்பதுடன், மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகவும் திகழ்கின்றன.

இந்த பயணத்தில் இந்தியா பல்வேறு சவால்களையும், குறைபாடுகளையும் சந்தித்திருக்கிறது. இந்தியாவில் இன்னும் பலருக்கு குறிப்பாக ஊரக மற்றும் தொலைதூரங்களில் இருப்பவர்களுக்கு கல்வி என்பது இன்னும் கனவாகவே உள்ளது. இந்த பகுதிகளில் பள்ளிக் கூடங்கள் இல்லாதது தான் இதற்கு காரணம் ஆகும். ஒதுக்கப்பட்ட மக்கள், பட்டியலினத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கும் சுல்வி வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இந்த குறையை போக்கும் பணியில் கொள்கை வகுப்பாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். ஒருகாலத்தில் கல்விக்கான கொள்கை வகுக்கும்போது சிறப்புத் திறன் தேவைப்படும் குழந்தைகளின் தேவைகள் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஆனால், இப்போது இந்த தேவைகள் உணரப்பட்டு அவற்றை நிறைவேற்றுவதற்காக பல்வேறு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**கேள்வி எண் 4 — 10 மதிப்பெண்கள்**

**பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்குமிகாமல்)**

முன்னுரை – சுற்றுச்சூழல் தூய்மை – தனிமனிதத் தூய்மை – வீடு தூய்மையானால் நாடும் தூய்மையாகும் – நோய்கள் வராமல் தடுக்க அரசு முயற்சிகள் – மாசு நீக்கி தூய்மை இந்தியா காண்போம் – முடிவுரை.

**கேள்வி எண் 5 — 10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரம், சமூகம், மனித வளம், கற்றுச்சூழல் என ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த ஏராளமான காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது. இந்த காரணிகள் ஒவ்வொன்றும் மிகவும் முக்கியமானவை ஆகும். வளரும் நாடுகளைப் பொறுத்தவரை இந்தக் காரணிகளில் எவை எவை இருக்கின்றன என்பதைப் பொருத்து அந்த நாடுகள் வளர்ச்சிகான சவால்களை எதிர்கொள்கின்றன. பொருளாதார வளர்ச்சி எப்போதும் சமூக வளர்ச்சியுடன் இணைந்து இருக்க வேண்டும். விவசாயம், தொழில்துறை, வணிகம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், மின்வளம் ஆகியவற்றில் ஏற்படும் முன்னேற்றம் தான் பொருளாதார வளர்ச்சியின் அறிகுறியாகும். அதேநேரத்தில் கல்வி,

சுகாதாரம், வீட்டுவசதி, குடிநீர் வசதி ஆகியவை சமூக வளர்ச்சியின் அடையாளம் ஆகும். அதேநோத்தில் இந்த இரண்டுமே மக்களின் பொருளாதர நிலையுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவை ஆகும். பரவலான பொருளாதார வளர்ச்சி தேவை, வளர்ச்சியின் பயன்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பகிரப்பட வேண்டும் என்பதற்கான தேவை எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சி என்பது நலமான வாழ்க்கையின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடியதும், அதேநேரத்தில் புதிய வாய்ப்புகளை உருவாக்கக்கூடியதும் ஆகும். அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குதல், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டின் மூலம் மக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவையும் இதில் அடங்கும்.

எனினும், பல தரப்பட்ட பிரிவினரைக் கொண்ட 120 கோடி மக்கள் உள்ள இந்தியாவில் வளர்ச்சியின் பயன்களை சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் கொண்டு செல்வது மிகப்பெரிய சவால் ஆகும். இந்த சவாலை சமாளிப்பதற்கு தான் அரசு நிர்வாகம் தேவைப்படுகிறது. இந்த அனைத்துக் காரணிகளையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி அமையும் வகையில் அரசின் கொள்கைகளும், திட்டங்களும் அமைய வேண்டும். நாட்டில் உள்ள மக்களின் வளர்ச்சியை உறுதி செய்ய பொருளாதாரமும், தனிநபர் வருமானமும் வளர்ச்சியடைவது மட்டும் போதுமானதல்ல என்ற உண்மையை கொள்கை வகுப்பாளர்களும், திட்டம் தயாரிப்பவர்களும் உணர வேண்டும். எந்த ஒரு சமுதாயமாக இருந்தாலும் வளர்ச்சியின் முதல் படிக்கல்லாக அமைவது திறன் பெற்ற மனித வளம் தான், மனித வளம் தான் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்கிறது என்பதால் குக்கிராமத்தில் வாழும் குழந்தைகள் உட்பட சமுதாயத்தில் அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதன் மூலம் அவர்களின் மனித வளத்தை மேம்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சிக்கான காரணிகளில் பருவநிலை மாற்றம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதால் வளர்ச்சிக்கான அடிப்படைகளில் சுற்றுச்சூழலும் ஓர் முக்கிய அம்சமாக பார்க்கப்படுகிறது. வறட்சியும், வெள்ளம் ஏற்படுத்தும் சீரழிவுகளும் விவசாயிகளின் சமூக அமைப்பில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்துகின்றன, அதனால் இத்தகைய பாதிப்புகளை அரசு முன்னுரிமை அடிப்படையில் சமாளிப்பது அவசியமாகிறது.

**கேள்வி எண் 6** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியை தமிழில் மொழிபெயர்க்க**

A virtual currency is a digital representation of value that can be digitally traded and functions as (a) a medium of exchange, and/ or (b) a unit of account, and/or (c) a store of value, but, unlike fiat currency like the rupee, it is not legal tender and does not have the backing of a government. A cryptocurrency is a subset of virtual currencies, and is decentralised, and protected by cryptography.

Cryptocurrency is a relatively new type of money that operates in a completely different way than the traditional currency we all use every day. The most basic

difference is that it's exclusively a virtual currency, meaning there are no physical cryptocurrency coins or notes you can keep in your back pocket.

It's also issued, or created, in a unique way. Instead of being produced by a central bank or government, like U.S. dollars, euros and other fiat currencies are, new cryptocurrency units typically enter circulation through a technological process that involves the participation of volunteers from all over the world using their computers.

That is why cryptocurrency is often described as "decentralized." Cryptocurrencies are typically not controlled or operated by any single entity in any single country. It takes an entire network of volunteers from around the world to secure and validate transactions made with cryptocurrency.

**கேள்வி எண் 7** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

தமிழக தொழில்துறைச் செயலராக, தமிழக அரசால் அடுத்தாண்டு நடத்தப்பட உள்ள உலக முதலீட்டாளர் மாநாடு தொடர்பாக செய்தி வெளியிட வேண்டி தமிழகத்தில் உள்ள அனைத்து பத்திரிக்கை மற்றும் செய்தி நிறுவனங்களுக்கும் கடிதம் ஒன்றை வரைக.

கேள்வி எண் 8 **20** மதிப்பெண்கள்

**கீழ்க்காண்பவற்றை உங்கள் சொந்த வாக்கியத்தில் எழுதுக**

1. சமூக நீதி
2. கானல் நீர்
3. வெகுளி
4. பண்பாடு

**பின்வரும் இனைசொற்களை பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. கணை - கனை
2. உண் - உன்
3. குலம் - குளம்
4. புரம் - புறம்

**பிரித்தெழுதுக**

1. நிற்பதொன்றில்

2. பேரண்டங்கள்

3. உளதாகும்

4. முத்தமிழ்

**எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. கயல்விழி திருக்குறள் பயின்றாள்

2. கபிலன் பொங்கல் போட்டியில் வெற்றி பெறவில்லை

3. நேற்று மாணவர்கள் பள்ளிக்கு வந்தனர்

4. நண்பர்களுடன் பூங்காவிற்கு சென்றேன்.

**பிழை நீக்கி எழுதுக**

1. குறுந்தொகை எட்டுத்தொகை நூல்கலுள் ஒன்று

2. பெட்டிக்குள் பனம் இருக்கிறது

3. அடிமைத் தலையை காந்தியடிகள் உடைத்தார்

4. புகை வண்டியை நிருத்த சிவப்புக் கொடி காட்டினர்

**MODEL TEST (OPEN) PAPER – II**

| |
|---|
| There is no feedback for this Test, if Time permits Discussion alone will be provided. |
| இத்தேர்வுக்கு மதிப்பீடு ஏதும் வழங்கப்படாது, நேரம் அனுமதித்தால் கலந்துரையாடல் மட்டும் வழங்கப்படும் |

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு- II நேர்முகத் தேர்வு பதவிகள் மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள் தொகுதி-II மற்றும் தொகுதி-IIA -க்கான முதன்மைத் தேர்வு**

**MAIN WRITTEN EXAMINATION FOR COMBINED CIVIL SERVICES EXAMINATION-II (INTERVIEW POSTS AND NON-INTERVIEW POSTS) (GROUP-II AND IIA SERVICES)**

**PAPER – II**

**TIME : 3 HOURS** — **TOTAL MARKS: 300**

**கால அளவு: மூன்று மணி நேரம்** — **மொத்த மதிப்பெண்கள் : 300**

**அலகு -1**

i) ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்,
Answer not exceeding 50 words each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு மதிப்பெண்கள்,
Each question carries six marks.

iii) பிரிவு-அ மற்றும் பிரிவு-ஆவில் கொடுக்கப்பட்டுள்ள பதினெட்டு வினாக்களில் எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்
Answer any fifteen questions out of eighteen questions in Section A & B.

**( 15*6=90)**

**பிரிவு -அ**

1. Give a brief information about mars.
   செவ்வாய் கிரகத்தைப் பற்றிய சுருக்கமான தகவல்களைத் தருக

2. Give at least two differences between LPG and CNG
   LPG மற்றும் CNG இடையே குறைந்தது இரண்டு வேறுபாடுகளை எழுதுக

3. What steps should be taken to conserve the energy resources?
   ஆற்றல் வளங்களை சேமிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?

4. Write short note on | சிறுகுறிப்பு வரைக
   A) CoWin | கோவின்

B) Aarogya sethu | ஆரோக்கிய சேது

5. Explain the difference between Web 3.0 and Deep Web
   **Web 3.0** க்கும் **Deep Web**க்கும் உள்ள வித்தியாசத்தை விளக்குக

6. Compounds such as alcohols and glucose also contain hydrogen but are not categorised as acids. Describe an activity to prove it.
   ஆல்கஹால் மற்றும் குளுக்கோஸ் போன்ற கலவைகள் ஹைட்ரஜனைக் கொண்டிருக்கின்றன, ஆனால் அவை அமிலங்களாக வகைப்படுத்தப்படவில்லை. அதை நிரூபிக்க ஒரு செயல்பாட்டை விவரிக்கவும்.

7. Prepare a chart showing the endocrine glands, their cell types, the hormones secreted and their specific functions on the target tissues.
   நாளமில்லா சுரப்பிகள், அவற்றின் செல் வகைகள், சுரக்கும் ஹார்மோன்கள் மற்றும் இலக்கு திசுக்களில் அவற்றின் குறிப்பிட்ட செயல்பாடுகளைக் காட்டும் விளக்கப்படத்தைத் தயாரிக்க

8. Explain the Judicial endeavour in India for the Protection of Human Rights.
   மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இந்தியாவில் நீதித்துறை முயற்சியை விளக்குக

9. Do you think " Aatma Nirbhar Bharat " programme initiated by the Government of India can enhance the industrial growth of India?
   இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட "ஆத்ம நிர்பார் பாரத்" திட்டம் இந்தியாவின் தொழில்துறை வளர்ச்சியை மேம்படுத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பிரிவு -ஆ**

1. Answer the following questions | கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க
   A) Epidemiology | எபிடெமியாலஜி
   B) Paleodemography | பேலியடெமாகிராபி

2. Define Corruption in Administration. Discuss the ways and means to eradicate corruption.
   நிர்வாகத்தில் ஊழலை வரையறுக்க. ஊழலை ஒழிப்பதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளைப் பற்றி விவாதிக்க

3. What is Regionalism? Do you think it comes in the way of National Unity?

பிராந்தியவாதம் என்றால் என்ன? இது தேசிய ஒருமைப்பாட்டின் வழியில் வரும் என்று நினைக்கிறீர்களா?

4. Explain the Principle and application of DNA fingerprinting.
   டி.என்.ஏ ரேகை அச்சிடல் தொழில் நுட்பம் மற்றும் பயன்பாட்டை விளக்குக.

5. What are the impacts on informal sectors in Indian economy in pandemic?
   தொற்றுநோயால் இந்தியப் பொருளாதாரத்தில் முறைசாரா துறைகளில் என்ன பாதிப்புகள் உள்ளன?

6. Discuss the inter-state disputes on sharing of Water resources in India with suitable examples.
   இந்தியாவில் உள்ள நீர் ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் மாநிலங்களுக்கு இடையேயான மோதல்களை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க

7. Critically examine the World Health Organisations response to Covid-19.
   கோவிட்-19க்கு உலக சுகாதார நிறுவனத்தின் நடவடிக்கைகளை விமர்சன ரீதியாக ஆராய்க

8. Explain the importance of the 'Lokpal and Act, 2013' at the National Level and its operationalization in Tamilnadu.
   தேசிய அளவில் 'லோக்பால் மற்றும் சட்டம், 2013' இன் முக்கியத்துவம் மற்றும் தமிழ்நாட்டில் அதன் செயல்பாடுகளை விளக்குக

9. Is it correct to say that 'Governor of a State is like a bird in the goldern cage'?
   'ஒரு மாநிலத்தின் கவர்னர் தங்கக் கூண்டில் இருக்கும் பறவை போன்றவர்' என்று சொல்வது சரியா?

UNIT – II

அலகு - 2

i) ஒவ்வொரு வினாவிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.
   Answer not exceeding 150 words each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் பன்னிரெண்டு மதிப்பெண்கள்.
   Each question carries twelve marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள பன்னிரெண்டு வினாக்களில் எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
   Answer any ten questions out of twelve questions.

**(10*12=120)**

1. Explain the co-existence of high economic growth and high income-inequality in India. Do you think the principle of Universal Basic Income can reduce the incidence of poverty and income inequality in India?
இந்தியாவில் உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் உயர் வருமான-சமத்துவமின்மை இணைந்து இருப்பதை விளக்குக. உலகளாவிய அடிப்படை வருமானம் என்ற கொள்கை இந்தியாவில் வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மையைக் குறைக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

2. Define and discuss the types of semiconductors.
குறைக்கடத்திகளின் வகைகளை வரையறுத்து விவாதிக்க

3. Explain the thrust of a rocket and on what factors does it depend? Also explain How SSLV different from PSLV
ஒரு ராக்கெட்டின் உந்துதலை விளக்கவும் மற்றும் அது என்ன காரணிகளை சார்ந்துள்ளது? பிஎஸ்எல்வியில் இருந்து எஸ்எஸ்எல்வி எப்படி வேறுபடுகிறது என்பதையும் விளக்குக

4. Evaluate the impacts of internal river linkage projects on Indian agricultural system.
இந்திய விவசாய அமைப்பில் உள்நாட்டு நதிகள் இணைப்பு திட்டங்களின் தாக்கங்களை மதிப்பிடுக

5. Discuss the justifications of India's bid for a permanent member of the UN Security Council.
ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவிக்கான இந்தியாவின் முயற்சியின் நியாயங்களைப் பற்றி விவாதிக்க

6. Examine the sources of revenue for a Gram Panchayat in Tamilnadu
தமிழ்நாட்டில் உள்ள ஒரு கிராம பஞ்சாயத்துக்கான வருவாய் ஆதாரங்களை ஆய்வு செய்க

7. Explain the composition and role of National Institution for Transforming India (NITI) Aayog in India's Socio-economic change.
இந்தியாவின் சமூக-பொருளாதார மாற்றத்தில் இந்தியாவை மாற்றுவதற்கான நிதி ஆயோக்கின் அமைப்பு மற்றும் பங்களிப்பை விளக்குக

8. Discuss the relationship between the citizens and the administration. Explain the recent steps taken by Government of Tamilnadu to for citizen-Friendly Administration
குடிமக்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான உறவைப் பற்றி விவாதிக்கவும். குடிமக்களுக்கு உகந்த நிர்வாகத்திற்காக தமிழக அரசு சமீபத்தில் எடுத்த நடவடிக்கைகளை விளக்குக

9. Explain the differences and similarities between Cryptocurrency and Central Bank Digital currencies?
கிரிப்டோகரன்சி மற்றும் மைய வங்கியின் நாணயங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமைகளை விளக்குக?

10. "women are active change agents in society and champions of sustainability" in the Light of the statement critically evaluate TN Moovalur Ramamirtham Ammaiyar Higher Education Assurance Scheme
"பெண்கள் சமூக செயல்பாட்டின் மாற்ற முகவர்கள் மற்றும் நிலைத்தன்மையின் வெற்றியாளர்கள்" என்ற அறிக்கையின் வெளிச்சத்தில் டிமூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தை விமர்சன ரீதியாக மதிப்பிடுக

11. Establish the relationship between executive agencies and the secretariat.
நிர்வாக அமைப்புகளுக்கும் செயலகத்திற்கும் இடையிலான உறவை நிறுவுக

12. Discuss, in details, the various environmental hazards and their impacts in India.
இந்தியாவில் பல்வேறு சுற்றுச்சூழல் அபாயங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றி விரிவாக விவாதிக்க

## அலகு -3
## UNIT - III

i) ஒவ்வொரு வினாவிற்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.
Answer not exceeding 250 words each.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் பதினைந்து மதிப்பெண்கள்.
Each question carries fifteen marks.

iii) கொடுக்கப்பட்டுள்ள எட்டு வினாக்களில் எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
Answer any six questions out of eight questions.

**(6*15=90)**

1. Evaluate the success of ASHA programme in achieving the twin objectives of women empowerment and improving public health.
   பெண்கள் அதிகாரமளித்தல் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய இரட்டை நோக்கங்களை அடைவதில் ஆஷா திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுக

2. Discuss All India Service and its impact on Autonomy of States.
   அகில இந்திய சேவை மற்றும் மாநிலங்களின் சுயாட்சி மீது அதன் தாக்கம் பற்றி விவாதிக்க

3. Explain the concept of population dynamics? Discuss the social dimensions of population control and family welfare programmes in India.
   மக்கள்தொகை இயக்கவியல் கருத்தை விளக்குக? இந்தியாவில் மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்ப நலத் திட்டங்களின் சமூகப் பரிமாணங்களைப் பற்றி விவாதிக்க

4. "Education is an instrument of social control and social change" critically examine the statement.
   "கல்வி என்பது சமூகக் கட்டுப்பாடு மற்றும் சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி" என்ற கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க

5. Politics of freebies has raised serious governance issues and pose fundamental questions about the viability of the democratic process in the future. Do you agree that it is good for politics but bad for economics?
   இலவசங்களின் அரசியல் தீவிரமான நிர்வாகப் பிரச்சினைகளை எழுப்பியுள்ளது மற்றும் எதிர்காலத்தில் ஜனநாயக செயல்முறையின் நம்பகத்தன்மை பற்றிய அடிப்படை கேள்விகளை எழுப்புகிறது. இலவசங்கள் அரசியலுக்கு நல்லது ஆனால் பொருளாதாரத்திற்கு கேடு என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

6. “Tamilnadu is a fast-transforming Knowledge economy” Discuss the statement.
   "தமிழ்நாடு அறிவுசார் பொருளாதாரமாக வேகமாக மாறிவருகிறது" இக்கூற்றை விவாதிக்க

7. Evaluate the changing role of India in G 20 Association in present scenario.
   தற்போதைய சூழ்நிலையில் **G 20** கூட்டமைப்பில் இந்தியாவின் மாறிவரும் பங்கை மதிப்பிடுக

8. Answer the following questions in 125 words each.
   கீழ்க்காண்பவற்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் **125** வார்த்தைகளில் விடையளிக்க

A) "Space technology is improving our lines and making the world a better place"-discuss briefly giving examples.
"விண்வெளி தொழில்நுட்பம் நமது வழிகளை மேம்படுத்துகிறது மற்றும் உலகத்தை சிறந்த இடமாக மாற்றுகிறது" - சுருக்கமாக எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க

B) What is a Supercomputer? Explain the objectives and prosperous steps taken by Indian Government.
சூப்பர் கம்ப்யூட்டர் என்றால் என்ன? இந்திய அரசு எடுத்த நோக்கங்கள் மற்றும் வளமான நடவடிக்கைகளை விளக்குக

Kindly share your feedback about the Question paper through:
https://t.me/iyagroup2mains

**சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.**